சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நீலகிரி மாவட்ட வருவாய் அலகு – செல்வி.நே.வினோதினி, த/பெ. காலஞ்சென்ற திரு.எம்.பி.நேரு – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி 9(2) பிரிவு

அரசாணை (3டி) எண். 128

நாள் 20.07.2023
சோபகிருது வருடம், ஆடி– 04,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.3/43912/2020, நாள் 09.06.2022.

**********

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், நீலகிரி மாவட்டத்தில், காவல் துறையில் முதல் நிலை காவலராகப் பணியாற்றி பணியிடையே 11.11.2011 அன்று காலஞ்சென்ற திரு எம்.பி.நேரு என்பவரின் மனைவி திருமதி.ஷீலாதேவி என்பவர் தனது மகள் செல்வி.நே.வினோதினி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநிமயனம் கோரி 25.05.2012 அன்று மனு அளித்துள்ளார் என்றும், தனியர் செல்வி.நே.வினோதினி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநிமயனம் கோரி 25.05.2012 அன்று மனு அளித்துள்ளார் என்றும், இம்மனுக்கள் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் பெறப்பட்டுள்ளது என்றும், தனியர், விண்ணப்பம் அளிக்கப்பட்ட தேதியில் 17 வயதுடையவராக இருந்ததால், 18 வயது நிரம்பியவுடன் மனு அளிக்க அறிவுறுத்தியதன் அடிப்படையில், மனுதாரர் அவருக்கு 18 வயது பூர்த்தியான பிறகு 07.11.2014 அன்று மீண்டும் மனு சமர்ப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி (மார்ச் 2009) பெற்றவராக இருந்துள்ளார் என்றும், காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்ப வறுமை நிலையினைக் கருத்தில் கொண்டு கருணை

//த.பி.பா//

Scanned with OKEN Scanner

அடிப்படையில் செல்வி.நே.வினோதினி என்பவருக்கு மாவட்ட ஆட்சியரால் இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட தேதியில் தனியருக்கு 18 வயது நிறைவடையவில்லை என்பதால், அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b)–ஐ தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்து அரசாணை பெற்றுத் தரக் கோரிய நீலகிரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை ஏற்று, தனியர் செல்வி.நே.வினோதினி என்பவர் பொருட்டு, அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b)–ஐ வயது விதித் தளர்வு செய்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 05.12.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசாணை பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில், காவல்துறையில் பணியாற்றி பணியிடையே 11.11.2011 அன்று காலஞ்சென்ற திரு.எம்.பி.நேரு என்பவரின் மகள் செல்வி.நே.வினோதினி என்பவர் விண்ணப்பம் அளித்த நாளில் குறும வயது தகுதியான 18 வயதினைப் பூர்த்தி செய்யாததால், தனியர் பொருட்டு, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள வயது வரம்பிலிருந்து விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b) மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்தும் தனியர் செல்வி.நே.வினோதினி என்பவர் பணியேற்ற நாளான 05.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 3550/க்யூ.2/2023–1, நாள் 30.05.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 3034/ஜி–2/2023–1, நாள் 21.06.2023–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.

//த.பி.பா//

Scanned with OKEN Scanner

மாவட்ட ஆட்சியர், நீலகிரி.
செல்வி.நே.வினோதினி, இளநிலை உதவியாளர்.
(மாவட்ட ஆட்சியர், நீலகிரி மூலமாக)
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20/7/2023
பிரிவு அலுவலர்.

20-7-23

Scanned with OKEN Scanner